பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 13 | சனிக்கிழமை | 29.07.2023 | கதிர் 260

# பொலிஸ் அதிகாரங்களை வழங்க சு.க. கடும் எதிர்ப்பு

## கட்சிச் செயலாளர் வெளிப்படை

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. அப்படி மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டால் அது தென்னிலங்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் மீண்டும்மோதல்களை உருவாக்கும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அபிவிருத்திக்கான அதிகாரப் பகிர்வுக்கு முழுமையான ஆதரவை வழங்கத் தமது கட்சி தயாராகவுள்ளதாகவும், ஆட்சியாளர்கள் இது தொடர்பில் தமது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் என்றும் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தினார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக வியலாளர்மாநாட்டில்இதனைத்தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

13ஆவது அரசமைப்புத் திருத்தம் இந்தியாவினால் பலவந்தமாகத் திணிக்கப் பட்டதாகும். எனினும், இந்தியாவுடன் தற்போது காணப்படும் இராஜதந்திர தொடர்புகள் காரணமாக எம்மால் ☞2

# இது ரகசியம் அல்ல!

ஆடு பகை குட்டி உறவு என்றொரு சொலவடை தமிழில் உண்டு. அதாவது ஒரு குடும்பத்தின் பெரியவர்களுடன் முரண்பாடு இருந்தாலும் பிள்ளைகளுடன் அந்த முரண்பாட்டைக்காட்டிக் கொள்ளாமல் நடந்துகொள்வார்கள். அரசுத் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவிடயத்தில் இதனைத தலைகீழாகப்புரட்டிப்போடலாம். குட்டிபகை ஆடுஉறவு. இப்போதைக்குதமிழர்பிரச்சினை தொடர்பில் ரணிலின் அணுகுமுறையை அப்படித்தான் பார்க்கவேண்டியிருக்கிறது. அதாவது விக்னேஸ்வரனின் மாணவனும் முன்னாள் நெருங்கிய சகா மற்றும் ஆலோசகருமான சுமந்திரன் பகை ஆனால், விக்னேஸ்வரன் நெருங்கிய உறவு என்பதே இப்போதைய ரணிலின் நிலை. அதைக் குறித்துத் தமிழ் மக்கள் கவலைப்படத்தேவையில்லை. நாளையே ரணிலுக்குத் தேவைப்பட்டால் இந்த நிலைப்பாடு மீண்டும் தலைகீழாகிவிடும், எமதுதலைவர்களும் அப்போது அதற்கொரு நியாயம் கற்பித்துக்கொண்டு ரணிலோடு சேர்ந்து நிற்பார்கள்.

புதன்கிழமை ரணில் கூட்டிய அனைத்துக் கட்சிக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கும் அவருக்கும் ☞2

# யானைகள் தாக்கியதில் ஒரே நாளில் 3 பேர் சாவு

இலங்கையின் வெவ்வேறு இடங்களில் ஒரே நாளில் காட்டு யானைகள் தாக்கி மூவர் சாவடைந்துள்ளனர்.

மொனராகலை, பொலனறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் நேற்று இந்தச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மொனராகலை - மெதகமை பகுதியில் காட்டு நேற்றுப் பிற்பகல் காட்டு யானை தாக்கி 58வயதான ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார். குறித்த நபர் வயல் வேலைக்குச் சென்றபோது யானையின் தாக்குதலுக்கு இலக்கானார் என்று பொலிஸார் தெரிவித்தனர். ☞2

## அதிகாரங்களைப் பகிர்வதற்காக

# அனைத்துக் கட்சிக் கூட்டத்தை ரணில் நடத்தியது வேடிக்கை

## டலஸ் அழகப்பெரும நகையாடல்

ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவின் அதிகாரப்பகிர்வுக்கான அனைத்துக் கட்சிக் கூட்டம் வேடிக்கையானது என சுதந்திர மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

ராஜகிரியாவில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்..அவர்அங்கு மேலும் தெரிவித்ததாவது: ,

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரப் பகிர்வு சம்பந்தமாகக் கலந்துரையாட அனைத்துக்கட்சிக்கூட்டத்தை அவரது செயலகத்தில் நடத்தியிருந்தார். இந்த கலந்துரையாடல்

வேடிக்கையாக இருக்கின்றது. ஏனென்றால் 231 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கு அவர் தயாராக இல்லை. உள்ளூராட்சி மன்றங்கள் சாதாரண மக்களிடத்தில் அதிகாரங்களை வழங்கும் அவர்களுக்கு நெருங்கிய கட்டமைப்பாகும். அவ்விகமானஒருஅதிகாரத்தை ☞2

# அதிகாரப் பகிர்வு தொடர்பில் தமிழ்க் கட்சிகளுள் முரண்பாடு

## இப்படிச் சொல்கிறார் இராஜாங்க அமைச்சர் சுரேன்



தமிழ் கட்சிகளுக்குள் அதிகார பகிர்வு சம்பந்தமாக முரண்பாடுகள் காணப்படுவதாக உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்இதுகுறித்துஅவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனநாயக அடிப்படையில் அந்த விழுமியங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிகளை எடுத்துவருகிறார் அதன் அடிப்படையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் அபிவிருத்திகளை முன்னெடுக்கவும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கவும் அவர் அர்ப்பணிப்புடன் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளார் ☞2

# ஜெரோமின் வங்கிக் கணக்கில் 12 பில்லியன் ரூபாய் வைப்பில்

## நீதிமன்றுக்கு அறிக்கையிட்டது சிஐடி

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவின் 11வங்கிக் கணக்குகளை ஆராய்ந்ததில் மொத்தம் 12.2 பில்லியன் வைப்பில் உள்ளதாக சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பிரியந்த நவானவினால் உயர்நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

எல்லே குணவன்ச தேரர் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை நேற்று இடம்பெற்றபோதே, போதகர் ஜெரோம்பெர்னாண்டோவின் வங்கிக்கணக்குகளில் உள்ள பணம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டது.

போதகர் அண்மையில் உரையற்ற காணொளியில் புத்தபகவான் தொடர்பான கருத்துக்கள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

அதற்கமைய அவரை கைதுசெய்யுமாறு கோரி, புதிய பௌத்த முன்னணி என்ற அமைப்பு, ☞2

# இலங்கையில் சீன கடற்படைத்தளம் அமையும் வாய்ப்புக்கள் அதிகரிப்பு

## பல்கலைக்கழக ஆய்வில் தகவல்

சீனாவின் மக்கள் விடுதலை இராணுவக் கடற்படை தளத்தை அமைக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முதலிடத்தில் இருப்பதாக வர்ஜீனியாவில் உள்ள வில்லியம் அண்ட் மேரி பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

அந்த ஆய்வு குறித்து ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளதாவது,

அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக்கு ஏற்கனவே சீனா 2.13 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்துள்ளது.

சீனாவின் இலக்குகளை அடைந்துக்கொள்ள இது அதிக வாய்ப்பாக அமையவுள்ளது.

சீனாவின் வெளிநாட்டு இராணுவ தளம் தற்போது ஆபிரிக்காவின் - ஜிபூட்டியில் மாத்திரமே இயங்கிவருகின்றது.

சீனாவின் மிக முக்கிய கடல்போக்குவரத்துகள் தென் சீனக் கடல், தாய்வான் கடற்பரப்பில்காணப்பட்டாலும்இந்த நடவடிக்கைகள் அனைத்தும் சீனாவின் நிலப்பரப்பிலும் மற்றும் உள்நாட்டு கடற்படை தளங்களிலுமே இடம்பெறுகின்றன.

இந்நிலையில், சீனாவின் மக்கள் விடுதலை இராணுவ கடற்படை தளத்தை இலங்கையில் அமைக்கும் ☞2

# எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ளத் தயார்

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு.

எந்த ஒரு தேர்தலுக்கும் முகம் கொடுப்பதற்கு தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாச அறிவித்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு நேற்று விடுத்த விசேட காணொளி அறிவிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிவிப்பில் அவர் மேலும்தெரிவித்துள்ளதாவது,

ஐக்கிய மக்கள் சக்தி மக்கள் நீதிமன்றத்தின் முன்னால் செல்வதற்கு அஞ்சவில்லை மக்கள் நீதிமன்றத்தின் முன்னால்செல்வதன் மூலமே புதிய ஆட்சிக்கான மக்களின் ஆணையைப் பெறமுடியும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

இவ்வாறான நிலையில் ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதி தேர்தலாக ☞2

# தமிழர் தாயகத்தில் இனங்காணப்பட்ட புதைகுழிகள் சர்வதேச நியமத்துக்கு ஏற்ப அகழப்படல் வேண்டும்

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்து





தமிழர்தாயகத்தில்இனங் காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகள் சர்வதேச நியமத்துடனும், கண்காணிப்புடனும் அகழப்பட வேண்டுமென வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின்உறவுகளின்சங்கத்தினர்வலியுறுத்தியுள்ளனர்.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினரின் ஏற்பாட்டில் நேற்று முல்லைத்தீவில் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டிருந்து. வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களையும் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கங்கள் இணைந்து இந்தப் பேரணிக்கு அழைப்பு விடுத்திருந்தன. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தனியார் போக்குவரத்து சங்கங்களின் பிரதிநிதிகள்,, வர்த்தக சங்கங்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள்,எனப் பல நூற்றுக்கணக்கானவர்கள் பேரணியில் பங்கேற்றனர்.

இந்தப் பேரணிக்கு ஆதரவாக வடக்கு கிழக்கு எங்கும் முழு அடைப்புப் போராட்டத்திற்கும் அழைப்பு விடுக்கப் பட்டிருந்தது. வடக்கில் இந்த அடைப்புப் போராட்டம் முழு அளவில் கடைப்பிடிக்கப்பட்டது. கிழக்குநகரங்களில் பகுதியளவிலேயே அடைப்பு நடத்தப்பட்டது. வடக்கில் பாடசாலைகள் இயங்கவில்லை. தனியார் போக்குவரத்துமுழுமையாகநிறுத்தப் பட்டிருந்தது. போக்குவரத்துச் சபையும் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளையேநடத்தியது. அத்தியாவசியமானவை தவிர்ந்த அனைத்துக் கடைகளும் முழுமையாக அடைக்கப்பட்டிருந்தன. அரச அலுவலகங்கள் ☞2

காலைக்கதிர்
Kalaikkathir

# கொக்குத்தொடுவாய் அகழ்வுக்கு நிதி ஒதுக்க ஜனாதிபதி இணக்கம்

## விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வுப்பணிக்கு நிதி ஒதுக்குவதாக ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கஉறுதியளித்தார் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில்வியாழக்கிழமைசெய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

''கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தொடர்பில்ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு நான் கொண்டு வந்தேன். அதன் அகழ்வு பணிகளுக்கு நிதி ஒதுக்குவதாக அவர் தெரிவித்தார். அகழ்வு பணிகளில் இலங்கை தொல்பொருள் திணைக்களம் ஈடுபட்டால் அது பக்கசார்பானதாக அமையும் என தமிழ் மக்கள் நம்புகிறார்கள். எனவே, ஐ.நா அனுசரணையில் இதனை முன்னெடுக்க வேண்டும் எனவும் நான் வலியுறுத்தினேன்.

எனது கோரிக்கை தொடர்பில் அவர் பதிலளிக்கவில்லை எனினும் அகழ்வு பணிகளுக்கு நிதி ஒதுக்குவதாக தெரிவித்தார்'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அகழ்வு பணி தொடர்பில் முறையான சட்ட ரீதியான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என தான் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் அகழ்வுப் பணிகள், அதற்கான நிதி ஆதாரத்தை எங்கிருந்து தேடுவது என்கிற சிக்கல் காரணமாக மீண்டும் தொடங்கப்படாமல் இருக்கின்றது. அதனைத் தோண்டுவதற்கான பூர்வாங்கப் பணிகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து நிறுத்தப்பட்ட அகழ்வுப் பணிகள், முறையாக மீண்டும் தொடங்கப்பட்டு முன்னெடுக்கப்படுவதற்குத் தேவையான நிதி மதிப்பீட்டைச் செய்யும்படி நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

### இறைச்சியாக்கப்பட இருந்த

# அரிய வகை ஆமை மன்னாரில் மீட்பு

(ந.லோகதயாளன்.)

மன்னாரில் இறைச்சிக்குக் கொல்லப்படுவதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த 160 கிலோ நிறை கொண்ட அரிய வகை கடலாமையை கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளும் விசேடஅதிரடிப்படையினரும் இணைந்து உயிருடன் மீட்டனர்.

மன்னார் பனங்கட்டிக் கொட்டுப்பகுதியில் ஓர் வீட்டில் ஆமை ஒன்று உயிருடன் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அங்கு சோதனை நடத்தப்பட்டது.



வீட்டுக்குள் கயிற்றால்கட்டப்பட்டுதலை கீழாகமறைத்துவைக்கப்பட்டிருந்த அரிய வகை ஆமை மீட்கப்பட்டு வனஉயிரிகள் திணைக்களத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட ஆமையில் சிறு காயம் இருப்பதனால் அதற்குச் சிகிச்சையளிக்க வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். அதே நேரம் குறித்த ஆமையை இறைச் சியாக்கும் நோக்கில் மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டின்கீழ்சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார். கீறீன்ரேட்டில் வகையை சேர்ந்த அரிய வகைப் பேராமையே உயிருடன் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## இனி இது .....

இடையில் ஏற்பட்ட கருத்து மோதலைத் தொடர்ந்து கூட்டத்தை இடைநடுவில் முறித்துக்கொண்டு ரணில் வெளியேறி இருந்தார். மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள்என்றுசுமந்திரன் அங்கு வலியுறுத்தியதைத் தொடர்ந்து இந்தக் கருத்து மோதல் தொடங்கியது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த பலரும் தேர்தல்நடத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி வந்த நிலையில் சுமந்திரனும் அதனை வலியுறுத்தியதும் பதற்றமாகிவிட்டார் ரணில். அதனால்தான் அவர் கூட்டத்தை விட்டு வெளியேறினார்.

வெளியேறிய பின்னர் தற்போதையமதியுரைஞரான விக்னேஸ்வரனுக்கு அழைப்பெடுத்துள்ளார். பதற்றத்தில் கூட்டத்தைவிட்டு வெளியேறிவிட்டாலும் இதனை எப்படிச் சரி செய்யலாம்என்றுயோசித்திருப்பார் போலும், அதனால்தான் விக்னேஸ்வரனுக்கு உடனேயே அழைப்பெடுத்துள்ளார். என்ன சுமந்திரன் இப்படிக்குழப்புகின்றார்என்று தொடங்கி, 13 குறித்த இந்தப் பேச்சைத்தொடர்வதாஇல்லை இத்தோடுகைவிடுவதாஎன்று கேட்டுள்ளார்.

விக்னேஸ்வரனின் வார்த்தைகளில் சொன்னால் 13ஐப் பலப்படுத்தும் ரணிலின் தற்போதையதிட்டம்-அதாவது மாகாணசபைகளிடம்இருந்து எடுக்கப்பட்டஅதிகாரங்களைத் திரும்ப வழங்கி, அதற்கு மேலதிகமாகவும்அதிகாரங்களை வழங்குவது தொடர்பான திட்டம் - சாட்சாத் விக்னேஸ்வரன்களின் கைங்கரியத்தில் முன்னேறிவரும் நிலையில் அவரிடம் அதை நிறுத்துவோமா என்று கேட்டால் அவர் என்ன பதில் வழங்குவார்?

சுமந்திரன் என்னவேண்டுமானாலும் கதைக்கட்டும் சேர், நீங்கள் செய்வது மிக நல்லமுயற்சி, அதைக்கைவிடவேண்டாம், தொடர்ந்து செய்யுங்கள் என்றிருக்கிறார் விக்னேஸ்வரன். அதிகாரப் பகிர்வு தொடர்பான பேச்சை நிறுத் தத் தேவையில்லை, தொடர்ந்து நடத்தலாம் என்றும் கூறியிருக்கிறார். அதைஏற்றுக்கொண்டுஅடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரின்போது மீண்டும் பேசுவோம் என்று ரணில் கூறியிருக்கிறார்.

இந்த விவரங்களையெல்லாம் யாழ்ப்பாணத்தில் தன்னைச் சந்தித்த சில செய்தியாளர்களிடம் விக்னேஸ்வரனே தெரிவித்திருக்கிறார்.

சுமந்திரனுக்கும்விக்னேஸ்வரனுக்கும்இடையேநடக்கும் அக்கப்போரின் விளைவாக இந்த விவரங்கள் வெளியே தெறித்து வந்திருக்கின்றன. அனைத்துக் கட்சிக் கூட்டம் முடிந்ததும் அது பற்றிக் கருத்துக் கூறிய சுமந்திரன், மாகாண சபைத் தேர்தல் வேண்டாம்அதிகாரப்பகிர்வே வேண்டும்என்று கூட்டத்தில் தெரிவித்தார், அதனைதமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிர்த்தோம் என்று தெரிவித்திருந்தார். மறுநாள் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டிருந்தசுமந்திரனிடம் இருந்து இந்த விடயத்தை செய்தியாளர்கள்சிலர்மூன்று மொழிகளிலும் ஒரு 'கட்'டாக (தொலைக்காட்சிக்கான ஒரு சிறு ஒளிப்பதிவு) பெற்றிருந்தார்கள். அதிலும் சுமந்திரன் விக்னேஸ்வரனைக் குற்றம் பிடிக்கும் வகையில் அவர் தேர்தல் வேண்டாம் என்றார் என்கிற விடயத்தைப் பதிவு செய்திருந்தார்.

அந்தப்பதிவைத்தொடர்ந்தே விக்னேஸ்வரன் சில செய்தியாளர்களைச் சந்தித்து ரணிலுக்கும்சுமந்திரனுக்கும் இடையில்அன்றைய கூட்டத்தில் என்ன நடந்தது என்று பிரித்துமேய்ந்தார். அப்போதே ரணில் கூட்டத்தின் பின்னர் தன்னை இரகசியமாகத் தொடர்புகொண்டதையும் தான் அவருக்கு மதியுரைஞரான விடயத்தையும் போட்டுடைத்தார்.

''அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்குமுன்பாகவடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து நடத்திய கூட்டத்தில் சுமந்திரன், பேசும் போது மாகாணசபைகள் முறைமை தொடர்பில் எங்களுக்கு கவலையில்லை, அது இருந்தாலும் ஒன்றுதான் இல்லாவிட்டாலும் ஒன்றுதான் எமக்கு சமஷ்டியே தேவை எனும்தொனிப்பட பேசினார்.

சுமந்திரனின் இவ்வாறான பேச்சினால் கோபமடைந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உங்களுக்கு மாகாணசபை முறை தேவையில்லை என்றால் நாங்கள் இத்தோடு இந்த பேச்சை நிறுத்திக்கொள்வோம்அதைப் பற்றி பேசத் தேவையில்லை என தெரிவித்தார்.

அப்பொழுது நான், வலுவற்றிருக்கும் மாகாணசபை சட்டத்தை வலுப்படுத்தி எங்களிடம்இருந்துபறிபோன அதிகாரங்களை திரும்பவும் பெற்றுக் கொடுத்து அந்த அடிப்படையில் மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என்று நாங்கள் கோருகின்றோம் அதற்கு நீங்கள் நடடிக்கை எடுத்தால் நாங்கள்உங்களுக்குஆதரவு தருவோம்என்றுகூறினேன்.

அத்தோடு ஜனாதிபதி ரணிலின் கோபம் கொஞ்சம் தணிந்தது.

இதேவேளைபுதன்கிழமை இடம்பெற்றஅனைத்துக்கட்சி மாநாட்டில்பேசியசுமந்திரன் மாகாண சபை தேர்தல் எங்களுக்குவேண்டும்எனும் தொனிப்படப் பேசினார்.

இதன்போது குறுக்கிட்ட ஜனாதிபதி கடந்த முறை நீங்கள் பேசும்போது மாகாணசபைமுறைமைதேவை இல்லை என்று கூறி இருந்தீர்கள், இப்போதுநீங்கள்வேறு விதமாக பேசுகின்றீர்கள், உங்களுக்கே தெரியாது என்ன தேவை? என்ன தேவையில்லை? என்று என தெரிவித்தார்.

இதனால் சுமந்திரனுக்கு ஜனாதிபதிக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது - என்கிறார் விக்னேஸ்வரன்.

ஆகமொத்தத்தில்நடந்ததும் நடந்து கொண்டிருப்பதும் ரணில் - தமிழர் தரப்பு மோதலாஅல்லதுகுரு-சிஷ்ய மோதலா என்பது தொடர்பில் நாம் இனிப் பட்டிமன்றம் நடத்தவேண்டியதுதான்.

**இடிமின்னல்**
(idiminnal23@gmail.com)

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனை உதாசீனப்படுத்த முடியாது.

அபிவிருத்திக்கான அதிகாரப்பகிர்வுக்குமுழுமையான ஆதரவை வழங்க நாம் தயாராகவுள்ளோம். அதற்காக பொலிஸ், காணி அதிகாரங்களுடன் 13 ஐ முழுமையாக நடைமுறைப் படுத்தினால் அது தென்னிலங்கை மக்கள் மத்தியில் அச்சத்தை உண்டாக்கும். எனவேஇதுமக்கள்மத்தியில் மீண்டும் இன மோதல்கள் ஏற்பட வழிவகுக்கும்.

பொலிஸ் அதிகாரம் தொடர்பில் ஆட்சியாளர்கள் எந்த நிலைப்பாட்டையும் தெரிவிக்கவில்லை. நாமும் அது குறித்து பேசவில்லை. இது தொடர்பில் முதலில் ஆட்சியாளர்களின் முன்மொழிவே அவசியமாகும்.

சர்வகட்சி மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரனால் மாகாணசபைகளில்ஆயுதங்கள் அற்ற பிரஜா பொலிஸ் சேவையை வழங்குமாறு யோசனையொன்று முன்வைக்கப்பட்டது.

இதைப் போன்ற யோசனைகளைஆட்சியாளர்களே முன்வைக்கவேண்டும்.ஆட்சியாளர்களினால் இதற்கான வேலைத்திட்டம் முன்வைக்கப்பட்டால், அதற்கு எந்தளவுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும் என்று நாம் கட்சி ரீதியாக கலந்தாலோசித்து தீர்மானம் எடுப்போம்.

எவ்வாறிருப்பினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியல் ரீதியாக பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படக் கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும். முதலமைச்சர்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதால் ஏற்படக் கூடிய விளைவுகளை வரலாற்று சம்பவங்கள் ஊடாக நன்கு அறிந்திருக்கின்றோம்.

எனவே, மாகாண முதலமைச்சர்களுக்கு பொலிஸ்அதிகாரங்கள்வழங்கப்படுவதை நாம் முற்றாக எதிர்க்கின்றோம். ஆட்சியாளர்கள்இதுகுறித்தமுன்மொழிவுகளைமுன்வைக்கும்போது, முறையானதிட்டமிடல்களை வழங்கவேண்டும். மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் தென்னிலங்கை மக்கள் மத்தியில் அச்சம் காணப்படுகிறது.

இவ்விடயத்தில் ஜனாதிபதி எவ்வாறு செயற்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டை நாம் சர்வ கட்சி மாநாட்டில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றோம் - என்றார்.

## ஜெரோமின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு கோட்டையில் உள்ள குற்றப் புலனாய்வுப் திணைக்களத்திடம் முறைப்பாடு செய்துள்ளது.

குறித்த போதகருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி பிவித்துரு ஹெல உறுமயவும் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் முறைப்பாடு செய்திருந்தது.

இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணை முன்னெடுத்த குற்றப் புலனாய்வுத் திணைக்களம், ஜெரோம் இலங்கையில் இல்லாத நிலையில் அவரது வங்கிக் கணக்குகளை ஆராய்ந்து நீதிமன்றத்தில் அறிக்கையிட்டுள்ளது.

## யானைகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவரின் சடலம் மெதகமை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பொலனறுவை - மெதிரிகிரிய புதிய நகரத்தில் காட்டு யானை தாக்கி ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று அதிகாலைவீட்டின்வெளியே வந்த 72 வயதான நபரை யானை தாக்கியது என்று பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவரின் சடலம் மெதிரிகிரிய வைத்தியசாலையில்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அநுராதபுரம், மஹவ பகுதியில் காட்டு யானை தாக்கி 43 வயதான ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார். குறித்த பகுதிக்குள் நேற்று அதிகாலைநுழைந்தயானையை விரட்டுவதற்குமுற்பட்டபோது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவரின்சடலம்மஹவவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுஎன்றுபொலிஸார் தெரிவித்தனர். (02)

## அனைத்துக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகிர்வதற்கு தயார் இல்லாத ஒருவர் எவ்வாறு அதிகார பகிர்வு சம்பந்தமாக கலந்துரையாடலை நேர்த்தியாக முன்னெடுக்க முடியும் என்பதில் முரண்பாடுகள் காணப்படுகின்றன அல்லவா. ஆகவே சர்வ கட்சி கலந்துரையாடல் அவரது அரசியல் நலனை மையப்படுத்தியதாகும். இதற்கு எதிர்க்கட்சிகளை பயன்படுத்திக்கொள்வதே அவருடைய நோக்கமாக உள்ளது. அதிகாரங்களை பகிர்வது பற்றி பேசுபவர் முதலில் சாதாரண மக்களுக்கு கிட்டிய தூரத்தில் உள்ள உள்ளூராட்சிமன்றங்களுக்கான அதிகாரங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

## இலங்கையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்சத்தில் மேற்கத்திய பொருளாதாரத்தடைகள்ஏற்பட்டால், கப்பல் வழிகளைப் பாதுகாக்கவும், உளவுத்தகவல்களை சேகரிக்கவும்சீனாவுக்கு இது உதவுவதாக அமையும்.

அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையே அதிகரித்துவரும்பதற்றங்கள் ஏற்கனவே தெற்காசியாவில் ஒரு போர் பதற்ற நிலையை உருவாகும் என்ற அபாய நிலையும் காணப்படுகிறது - என்றுள்ளது.

## அதிகாரப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த செயற்பாட்டில் அனைத்து அரசியல் தரப்புகளையும் உள்ளீர்ப்பதற்கு அவர் முயற்சிகள் செய்து வருகிறார் ஆனால் தமிழ் கட்சிகளுக்குள் அதிகாரங்களை பகிர்ந்து கொள்வதா தேர்தலை நடத்திக் கொள்வதாஎன்பதில்முரண்பாடுகள் காணப்படுகின்றன ஆகவே தமிழ்கட்சிகள்முதலில்தமக்கு என்ன தேவை என்பதை தெளிவாகக் கலந்துரையாடி ஒருமுடிவுக்கு வரவேண்டும் அப்போதுதான் அடுத்த கட்டத்தை தொடர முடியும் - என்றார்.

## எந்தத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கட்டும் மாகாண சபை தேர்தலாக இருக்கட்டும் உள்ளூராட்சிமன்றதேர்தலாக இருக்கட்டும் எதற்கும் முகம் கொடுப்பதற்கு தயாராகவே உள்ளது மக்களின் ஆணை பெற்ற ஆட்சி ஒன்று நிலை நிறுத்தப்படுவது மிகவும் முக்கியமானதுதற்போதைய நிலையில் மக்கள் ஆணையில்லாத ஆட்சியே முன்னெடுக்கப்படுகிறது. இந்த ஆட்சியில் ஜனநாயக பண்புகளை எதிர்பார்ப்பது கடினமான காரியமாகும். ஆகவே தான் தேர்தலுக்குச் செல்லுமாறுநாம்தொடர்ந்தும் வலியுறுத்துகின்றோம். தேர்தலில் மக்கள் தமது தீர்மானத்தை எடுப்பார்கள் அதற்கு நான் மதிப்பளிக்க தயாராகவே உள்ளோம் - என்றார்.

## தமிழர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வங்கிகளில் பணிகள் மந்த கதியில் இடம்பெற்றன. பணியாளர்கள் எண்ணிக்கை குறைவாகவேகாணப்பட்டது.

அதேநேரம் கிழக்கு நகரங்களில் பகுதியளவிலேயே இந்தப் போராட்டம் இடம்பெற்றது. பல கடைகள் மூடப்பட்டிருந்தன.சில திறந்திருந்தன. போக்குவரத்தும் அதேபோன்றேஇடம்பெற்றது.

முல்லைத்தீவில் நடந்த பேரணியின்முடிவில்வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின்உறவுகளின் சங்கத்தினரால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறுவெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

தமிழர் தாயகத்தில் இனங்காணப்பட்ட மனித புதைகுழிஅகழ்வுப்பணிகளில் சர்வதேசகண்காணிப்பு,தமிழ் மக்களின் அபகரிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்படல், உள்நாட்டுப்போருக்கு சர்வதேச விசாரணை, அரசியல் கைதிகளின் விடுதலை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி உள்ளிட்ட மிக முக்கியமான ஏழு அம்சக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

காலா காலமாக தமிழினத்தின் மீது இனவழிப்பை மேற்கொண்டுவரும்சிங்கள பேரினவாதம் மனித புதைகுழிகளையே தமிழ் மக்களுக்கு பரிசாக கொடுத்துள்ளது. செம்மணியில் ஆரம்பித்த மனித புதைகுழி இன்று கொக்குத்தொடுவாய் வரை நீண்டுள்ளது. 1984 டிசெம்பர் 15 ஆம் திகதி கொக்குத்தொடுவாய் மற்றும் அதனை அண்டிய முல்லைத்தீவின் தெற்கு எல்லைக்கிராமங்களில் 131 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அந்தப்படுகொலையுடன் கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட கிராமங்களில்இருந்துஆயிரக்கணக்கான தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். அதன் பின்னர் சிங்கள இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் அப்பிரதேசம் இருந்தது. போர் முடிந்த பின்னரே அங்கு மக்கள் குடியேற்றப்பட்டனர். எனவே போர்நடந்த காலப்பகுதிக்குள்தான் இந்தப் புதைகுழி தோன்றியிருக்க வேண்டும். அதைவிட போர்க்காலத்தில் பயன்படுத்தப்பட்ட உடைகளும்சான்றுப்பொருள்களாகக் கிடைத்திருக்கின்றன. இவ்வாறான நிலையில் அங்கு காணப்பட்ட இந்தப் புதைகுழி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் புதைகுழிகளாக இருக்கலாம் என்ற அச்சம் இப்போது மேலோங்கி வருகின்றது.

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி தொடர்பான வழக்கு நீண்ட காலமாக உண்மைகண்டறியப்படாமல் இலங்கைப் பேரினவாத அரசின் நீதித்துறையால் மூடி மறைக்கப்பட்டுவருகின்றது. எனவே முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய்பகுதியில் உள்ளமனிதப்புதைகுழிஅகழ்வுப்பணிசர்வதேசநியமத்தின் அடிப்படையிலும், சர்வதேச கண்காணிப்பின் ஊடாகவும் மேற்கொள்ளப்படவேண்டும் என தமிழ் மக்களாகிய நாம் வலியுறுத்துகின்றோம்.

தற்போது மனித புதைகுழிகள் வெளிவந்து கொண்டிருக்கும் காலகட்டத்தில் சிறிலங்கா அரசானது 'உண்மை மற்றும்நல்லிணக்கஆணைக்குழு' எனும்நாடகத்தைஅரங்கேற்றத் தொடக்கி உள்ளது. கடந்த கால அனுபவங்களிலிருந்து எவ்வித உள்ளூர் ஆணைக்குழுக்களோ பொறிமுறைகளோ எவ்வித நீதியையும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வழங்கப்போவதில்லை. மாறாக இதுவும் இன்னுமொரு காலத்தை இழுத்தடிக்கும் ஒரு சதியே ஆகும். ஓ.எம்.பி. எவ்வாறு ஒருவித செயலற்ற ஆணைக்குழுவாக மாறியதோ அவ்வாறே இதுவும் மாறும். இந்த 'உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை' நாம் முற்றுமுழுதாக நிராகரிக்கின்றோம். மீண்டும் இந்த சிறிலங்காவின் ஏமாற்றுவித்தைக்கு சில சர்வதேச நாடுகளும் அனுசரணை வழங்குவது எமக்கு கவலையையும் வருத்தத்தையும் தருகின்றது.

கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை சிங்களப் பேரினவாத அரசு ஈழத்தமிழர்கள் மீது இன்றும் தொடர்ந்த வண்ணம்உள்ளது. இக்கட்டமைக்கப்பட்ட இனவழிப்பில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க தற்போதைய பூகோள பொருளாதார அரசியல் சூழ்நிலையில் தென்னாசியாவின் உணர் புள்ளியில் தேசியஇனப்பிரச்சினையைத் தீர்க்க முற்படும் சர்வதேச சக்திகள் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

1. தமிழர் தாயகத்தில் காணப்படும் மனிதப் புதைகுழிகளின் அகழ்வுப்பணிகள் சர்வதேசநியமத்தின் அடிப்படையிலும், சர்வதேச கண்காணிப்பின் ஊடாகவும் மேற்கொள்ளப்படவேண்டும்.

2. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டஉறவுகள்தொடர்பான சர்வதேச விசாரணைகள்உடனடியாகஆரம்பிக்கப்படுவதுடன், அவர்களுக்கு சர்வதேச நீதி வழங்கப்பட வேண்டும்.

3. தமிழின அழிப்பை மேற்கொண்ட, எமது உறவுகளை காணாமல் ஆக்கிய சிங்கள இராணுவம் தமிழர் தாயகம் எங்கும் நிலை கொண்டுள்ளது. இந்த இராணுவம் தமிழர் தாயகத்தில் 1983ஆம்ஆண்டிற்குமுற்பட்ட அளவிற்கு குறைக்கப்பட்டு முகாம்களுக்குள் முடக்கப்பட வேண்டும். அவர்கள்வலிந்து பறித்த தமிழர் நிலங்கள் மீள கையளிக்கப்பட வேண்டும்.

4. சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் எவ்விதநிபந்தனைகளுமின்றி உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

5. காலங்காலமாக நடைபெற்று வரும் தமிழின அழிப்பிற்கு சர்வதேச நீதி பொறிமுறை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாக நீதி வழங்கப் படவேண்டும்.

6. அரசஇயந்திரங்களான தொல்பொருள்திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனப் பாதுகாப்பு திணைக்களம், நிலவள திணைக்களம் மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக பௌத்த மயமாக்கல், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களைசிறிலங்கா அரசாங்கம் முனைப்போடு நடைமுறைப்படுத்தி வருகிறது. வடக்கு- கிழக்கில் உள்ள சுமார் 200 இற்கும் மேற்பட்டதொன்மைவாய்ந்த தமிழ்ஆலயங்களைகையகப்படுத்துவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. அத்துடன் தமிழர் தாயகம் எங்கிலும் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டும், அமைக்கப்படுவதிற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. இவ்வாறான நில அபகரிப்புகளும், பௌத்த சிங்கள மயமாக்கல்களும் உடனடியாக நிறுத்தப்பட்டு காணிகள் மீளக் கையளிக்கப்பட வேண்டும்.

7. மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்கள் மீதும், இன அடக்குமுறைக்கு எதிராகபோராட்டங்களைமுன்னெடுத்து வரும் வலிந்து காணாமல் ஆக்கப்படவர்களின் உறவுகள், மாணவர்கள், சமூகசெயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தப்படுவதுடன் அவர்கள் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டுவருகின்றனர். இது அவர்களின் பேச்சுரிமை, நடமாடும் சுதந்திரம் மற்றும்அடிப்படைமனிதஉரிமைகளை மீறும் செயலாகும். அத்துடன் தமிழர் தரப்பில் உருவாகும்விடுதலைக்கான தன்னெழுச்சியான அரசியல் வெளியை ஒடுக்குவதில் சிங்கள பௌத்த பேரினவாத அரசு குறியாகவே உள்ளது. இவ்வாறான அடக்குமுறைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

மேற்குறித்த உடனடி, அவசரமான பிரச்சினைகள் தீர்க்கப்படுமிடத்தேதான், அரசியல் தீர்வை நோக்கி நகரக் கூடிய புற சூழ்நிலை உருவாகும்.

தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கானஎந்தவொரு நிரந்தர அரசியல் தீர்வுக்கும், சர்வதேசத்தால் நடத்தப்பட்டு கண்காணிக்கப்படும் பொது வாக்கெடுப்பின் மூலம் தமிழ் மக்களின்ஆணையைப்பெற வேண்டும். இதில் நம்மை நாமே ஆளக்கூடியதீர்வுகளே தெரிவுகளாக உள்ளடக்கப்பட வேண்டும் என்பதையும் இந்த அறிக்கை மூலம் வெளிப்படுத்தி நிற்கின்றோம் எனக் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# மலையக பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமையை வழங்க ஏற்பாடு!

## அமைச்சர் ஜீவன் தெரிவிப்பு



மலையக பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை பெற்றுக்கொடுப்பதற்கான கூட்டு அமைச்சரவைப் பத்திரம் எதிர்வரும் காலங்களில் முன்வைக்கப்பட்டு, அதற்கான அனுமதி பெறப்படும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண, காணி அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ, தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோருடன் இணைந்தே இக் கூட்டு அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

அத்துடன், இலங்கை வாழ் மக்களுக்காக முன்வைக்கப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் தவறான கோணத்தில் கருத்துகள் பகிரப்பட்டு வருகின்றன. அவை நிறுத்தப்பட வேண்டும். 13 ஆவது திருத்தச்சட்டமென்பது சிறந்த ஜனநாயகக் கருவியாகும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் சுமார் 2 லட்சத்து 35 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகள் தேவைப்படுகின்றன. இந்திய அரசால் 14 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கை அரசாலும் வீடமைப்பு திட்டம் முன்னெடுக்கப்பட்டாலும் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு காலம் எடுக்கலாம். எனவே தான் பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமையை பெற்றுக்கொடுப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளது.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் இது பற்றி வெளிப்படையாக அண்மையில் அறிவித்தார். எனவே, எனது அமைச்சு உட்பட நான்கு அமைச்சுகளின் செயலாளர்களும் கலந்துரையாடி, இந்த விவகாரம் தொடர்பில் அமைச்சரவைப் பத்திரமொன்றை முன்வைப்பார்கள். அது கூட்டு அமைச்சரவைப் பத்திரமாக அமைச்சரவையில் முன்வைக்கப்படும்.

ரணசிங்க பிரேமதாஸ ஆட்சிக்காலத்திலேயே பெருந்தோட்ட நிறுவனங்கள் தனியாருக்கு வழங்கப்பட்டன. இது தொடர்பான குத்தகை ஒப்பந்தம் பலவீனமானது. லயன் வீடுகள் கூட தோட்டக் கம்பனிகளுக்குரிய சொத்துகளாக வழங்கப்பட்டுள்ளன. கெஞ்சி கேட்டால் அது பிச்சை, துணிந்து கேட்டால் தான் அது உரிமை. எனவே, காணி உரிமையை துணிந்து கேட்டுள்ளோம். அது நிச்சயம் கிடைக்கும்.

அதேவேளை, அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் என்பது இலங்கையில் 9 மாகாணங்களுக்குரியது. மாறாக அது வடக்கு, கிழக்குக்கு மட்டும் அல்ல. எனவே, 13 கிடைத்து விட்டால் தமிழர்கள் வென்று விடுவார்கள் என்ற கோணத்தில் கருத்துகள் பரப்பப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இது விடயத்தில் ஊடகங்களும் சமூகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும். -என்றார். (05)

# மக்களுக்கான சேவைகள் தொழிநுட்பமயமாக்கப்படும்

## அமைச்சர் ஜானக்க வக்கும்புர தெரிவிப்பு



ஒன்லைன் தொழில்நுட்பத்தின் ஊடாக பொதுமக்களுக்கு அவசியமான சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'ஒன்லைன் தொழில்நுட்பத்தின் ஊடாக பொதுமக்களுக்கு அவசியமான சேவைகளை உடனடியாகவும் முறையாகவும் வழங்க உள்ளூராட்சி மன்றங்கள் தயார்ப்படுத்தப்படும்.

2025ஆம் ஆண்டுக்குள் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் சொந்தமான வீதிகளை வரைபடமாக்க திட்டமிட்டுள்ளது.

36 வருடங்களின் பின்னர் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதுடன், இதன்மூலம் வீதிகள் எந்தெந்த நிறுவனங்களுக்குச் சொந்தமானவை என்பதும் அடையாளம் காணப்படும்.

தற்போது 69 உள்ளூராட்சி மன்றங்கள் தமது சேவைகளை ஒன்லைன் தொழில்நுட்பத்தின் ஊடாக செயற்படுத்தப்படுகின்றன.

இந்த வருட இறுதியில் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் ஒன்லைன் தொழில்நுட்பம் ஊடாக பொது மக்களுக்கு சேவைகளை வழங்க எதிர்பார்த்துள்ளோம்.


இதன்மூலம் உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெறும் ஊழல் மற்றும் மோசடிகள் தவிர்க்கப்படும்.

வீதி மின் விளக்குகள் உட்பட உள்ளூராட்சி மன்றங்களின் மின்சாரத் தேவைகளை நிவர்த்திசெய்ய சூரியசக்தியைப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பல வருடங்களாக தற்காலிக அடிப்படையில் குறித்த உள்ளூராட்சி மன்றங்களில் சேவை புரியும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்கத் திட்டமிட்டுள்ளது. - என இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (05)

# மீண்டும் இலங்கை வந்துள்ளார் ரஜினி















சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், இலங்கை ஊடாக இந்தியா செல்லும் வழியில், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் 'கோல்ட் ரூட்டில்' சிறிது நேரம் ஓய்வெடுத்துள்ளார்.

அதன்போது எடுத்து கொண்ட புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன.

இந்நிலையில், ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம், நடிகர் ரஜினிகாந்த் விமான நிலைய ஊழியர்களுடன், விமான நிலையத்தின் 'கோல்ட் ரூட்'ஸில் போஸ் கொடுக்கும் புகைப்படத்தை வெளியிட்டுள்ளது.

இதற்கிடையில், நடிகர் ரஜினிகாந்த் இரண்டாவது முறையாக ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் 'கோல்ட் ரூட்' வழியை பயன்படுத்தியதாக விமான நிலைய ஊழியர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# பாடசாலைக் காலணிகளின் விலையை குறைத்தது அரசு

பாடசாலை காலணிகள் மற்றும் பைகளின் விலையை வியாழக்கிழமை முதல் 10 வீதத்தால் குறைக்க உற்பத்தியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சில் தயாரிப்பாளர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போது இதற்கான இணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

சந்தையில் கிடைக்கும் பங்குகளை புதிய விலையில் விற்பனை செய்ய உற்பத்தியாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். (05)

# சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரிக்கு சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அன்பளிப்பு

## 1997 கலைப் பிரிவு மாணவர்களால்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 1997 ஆம் ஆண்டு உயர்தரவகுப்பில் கல்வி கற்ற கலைப்பிரிவு மாணவர்களால், கல்லூரி முதல்வர் லயன் மு.செல்வஸ்தானின் கோரிக்கைக்கு அமைவாகத் தாம் கல்வி கற்ற பாடசாலையில் தமது அணியினரின் பசுமையான அந்த இனிய நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும் பொருட்டு 24 லட்சம் ரூபாவுக்கு சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தசைக்கிள்பாதுகாப்பு நிலையம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு துர்க்காதேவி தேவஸ்தானம், சிவபூமி அறக்கட்டளை ஆகியவற்றின் தலைவரும் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உபதலைவரும் தாம் கல்வி கற்ற 1997 ஆம் ஆண்டு காலத்தில் தம்மை ஆற்றுப்படுத்திய வகுப்பாசிரியருமான கலாநிதி ஆறு.திருமுருகனால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டு பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட உள்ளது. (05)

# நெல்லியடி மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள்!







நெல்லியடி மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா வியாழக்கிழமை வெகுவிமர்சையாக இடம் பெற்றது.

முதலாம் நாள் நிகழ்வாக காலை மாணவர்களின் துவிச்சக்கர வண்டி பவனியும் பனம்கன்றுகள் நடும் நிகழ்வும் இடம்பெற்றன. அத்துடன் நூறாவது ஆண்டை முன்னிட்டு நினைவு முத்திரையும் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

ஊர்தி பவனியில் இராணுவ பீரங்கி ஒன்று கடேற் அணியினரால் உருவாக்கப்பட்டு அதுவும் காட்சியாகக் கொண்டு செல்லப்பட்டது.

பாடசாலை அதிபர் கிருஸ்ணகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஏற்கமுடியாத நடவடிக்கை

மருந்துகளின் தரம் குறித்த கேள்வி எழுந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட சர்ச்சைகளால் சுகாதாரத்துறை அமைச்சர்ஹெகலியரம்புக்வெலபதவிவிலகவேண்டும் என்றவலியுறுத்தல்கள் அதிகரித்து, அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் எதிர்க் கட்சியினால் நாடாளுமன்ற சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட பின்னணியில், திடீரென அரச வைத்தியசாலைகளின் தேவைகள், பற்றாக்குறைகள் தொடர்பில் அதன் அதிகாரிகள் ஊடகங்களுக்கு கருத்துக்கள் எதுவும் தெரிவிக்கக்கூடாதுஎன்றுசுகாதாரத்துறைச்செயலாளர் திடீரென ஒரு சுற்றறிக்கை அனுப்பி வைத்துள்ளார்.

அரச கொள்கை மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவதற்கும், விமர்சிப்பதற்கும் சுகாதார சேவைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு கடுமையானவிதிமுறைகளுடான தடைவிதித்துசுகாதார அமைச்சின் செயலாளரால் இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நாடுபொருளாதாரநெருக்கடிக்குள்சிக்கிக்கொண்டது முதல் நாட்டின் இலவச சுகாதாரத்துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பல மருந்துகளுக்குத் தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளது. பல மருந்துகள் இல்லை என்றாகி விட்டது. அதிலும் குறிப்பாக புற்றுநோய், சிறுநீரக நோய், சத்திரசிகிச்சைக்குத் தேவையான மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருட்கள் என்பன அரச வைத்தியசாலைகளில் இல்லாமல் சென்றதனால் பல நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

அதுபோன்ற தருணங்களில் அந்தந்த வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள், அதிகாரிகள் மற்றும் மருத்துவர்கள் ஊடகங்கள் மூலம் விடுத்த வேண்டுகோள்களுக்கு இணங்க பல தனிநபர்களும் நிறுவனங்களும் இத்தகைய மருந்துகள், மருத்துவப் பொருட்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளன. அவசர அவசரமாக இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளால் ஏற்பட்டுள்ளபிரச்சினைகள்வெளிப்படுத்தப்பட்டநிலையில் அவற்றுக்கு மாற்றீடான மருந்துகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் பலர் உதவிகளை வழங்கியுள்ளனர்.

இப்படி அரச வைத்தியசாலைகளின் குறைபாடுகள் ஊடகங்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டபோது அவற்றுக்கானஉதவிகள்கிடைத்துவந்தநிலையில், ஊடகங்களிடம் பேசுவதற்கு விதிக்கப்பட்டுள்ள இந்தத் தடை உத்தரவு பேரழிவுகளை ஏற்படுத்திவிடும் அபாயத்தையும் மறுக்க முடியாது.

உண்மைகளை வெளிக்கொணர்வதற்கு தடைவிதித்தும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் சூழ்ச்சிகளை மறைப்பதற்கும் ஆட்சியாளர்களால் இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதா என்று தொழில்வல்லுநர்கள் தொழற்சங்கக் கூட்டமைப்பு தலைவர் ரவி குமுதேஷ் எழுப்பியுள்ள கேள்வியில் நியாயம் இருப்பதாகவே தெரிகின்றது.

அரச வைத்தியசாலைகளின் உண்மை நிலவரம் தெரியவராத வரையில் அதற்கான உதவிகளும் கிடைக்கப்பெறாது, இது நோயாளர்களைப் பொறுத்த வரையில் பேரழிவுகளுக்கு இட்டுச் சென்றுவிடும்.

இந்தசுற்றறிக்கைதொடர்பாகஒருசேவையைமாத்திரம் கட்டுப்படுத்துவது மாத்திரமின்றி சுகாதாரத்துறைசார்ந்த அனைத்து தரப்பினரையும் அச்சுறுத்தும் விதமாக இது வெளியிடப்பட்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. இது ஒரு மோசமான நிலமை. மோசமான நடவடிக்கை. ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களைப் பயணம் வைக்கும் நடவடிக்கை. எனவே உடனடியாக அமைச்சுச் செயலரின் சுற்றறிக்கை மீளப்பெறப்படவேண்டும்.

வைத்தியசாலைகளின் உண்மை நிலமைகள் வெளிக்கொண்டுவரப்பட்டு மக்களுக்கு நன்மை கள் பெறப்படவேண்டும். குறுகிய அரசியல் இலாபங்களுக்காகவும் அரசியல்வாதிகளின் சுயநலன்களுக்காகவும் மக்களின்உயிர்களைஆபத்தில்தள்ளுவதைஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

# ரணில் இந்தியா செல்ல ஒரு வருடம் தாமதித்தது ஏன்?

உப்புல் ஜோசப் பெர்னாண்டோ



இலங்கையில் எந்தவொரு புதிய அரசுத் தலைவரும் பதவியேற்றதும் அவரது உத்தியோகபூர்வ முதல் பயணம் அமைவது இந்தியாவுக்கே. இலங்கையில் இருந்து ஒரு அரச தலை வர் இந்தியாவிற்கு வருவதற்கான உத்தியோகபூர்வ அழைப்பை விடுக்கும்போது இந்தியாவும்பாரம்பரியத்தைபின்பற்றுகிறது. எனினும், ரணில் ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது, அவருக்கு இந்தியா உத்தியோகபூர்வ அழைப்பை விடுக்கவில்லை. அத்தோடு இந்திய பிரதமர் நரேந்திர மோடி ரணிலுக்கு வாழ்த்துக்கூடத் தெரிவிக்கவில்லை. இலங்கையின் புதிய ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அவருக்கு முதலில் வாழ்த்து தெரிவிப்பது இந்தியாதான். ஆனால் இம்முறை சில மாதங்களுக்குப் பிறகுதான் ரணிலுக்கு மோடி வாழ்த்துத் தெரிவித்தார் . ரணில் ஜனாதிபதியாக பதவியேற்று ஒரு வருடம் கழித்தே இந்தியாவிற்குச் சென்றார்.

அது ஏன்? அதற்குக் காரணம் இந்தியாவில் ரணில் பற்றிய தெளிவற்ற பிம்பமே.

மகிந்த ராஜபக்ஷவின் சொந்த வார்த்தைகளில் சொல்வதானால், 2015இல் மஹிந்தவை தோற்கடித்த மைத்திரி-ரணில் கூட்டணியை உருவாக்கியதே இந்தியாதான். கோட்டாவும் அந்தக் கதையைச் சொன்னார். அந்தக் கதை உண்மையாக இருந்தால் 2015இல் இந்தியாவுக்கு நன்றிக் கடனாக ரணில் பிரதமரானார். 2015 ஜனாதிபதித் தேர்தலில் மைத் திரி வெற்றி பெற்றதும் அப்போது 50 நாடாளு



மன்றஉறுப்பினர்களின்ஆசனங்கள்கூட இல்லாத ரணிலைப் பிரதமராக்கினார். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ரணில் ஊடகவியலாளர் மாநாடு நடத்தி, சீனத் திட்டமான கொழும்பு துறைமுக நகரம் இரத்துச் செய்யப்படும் என்று கூறினார். ஆனால் ரணில் பிரதமரான ஒரு வருடத்தில் துறைமுக நகரை தொடர்ந்து கட்டமைக்க ஆரம்பித்தது மட்டுமன்றி, ராஜபக்ஷ கூட செய்யாததை செய்து அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்கு கொடுத்தார் ரணில். வழிபடச் சென்ற கோவிலே தமது தலையில் இடிந்து விழுந்தது போன்றநிலையைச்சந்தித்தது இந்தியா.

2018 உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், மஹிந்த மற்றும் நாமலை இந்தியாவிற்கு வரவழைத்து, அவர்களுக்கு மாபெரும் வரவேற்பு அளித்த மோடி, ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிக்குவருவதில்இந்தியாவுக்குஎந்தப் பிரச்சினையும் இல்லை என்பதைக் காட்டியது. மைத்திரி ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் மோடியின் முதல் இலங்கைப் பயணத்தின்போது, மோடியை சந்திப்பதற்கு நேரம் ஒதுக்க மஹிந்த பெரும் முயற்சியை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அந்தச் சந்திப்புக்கு கோட்டாவையும் அழைத்துச் செல்ல மகிந்தவும் பசிலும் விரும்பினர்.

ஆனால் மிகுந்த வற்புறுத்தலுக்கு பிறகே கோட்டாவையும் அழைத்து வர அனுமதி அளிக்கப்பட்டது. இருந்த போதிலும், 2018 உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்று, அப்போது வெறும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோதும் மகிந்தவுக்கு, பெரிய வரவேற்பு அளித்தார் மோடி.

மகிந்தவுடன் மோடியை சந்திக்க நமலும் இந்தியா சென்றார். அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்கு வழங்கியதன் மூலம் ரணில் இந்தியாவில் ஏற்படுத்திய அதிர்ச்சியே இதற்குக் காரணம்.

மைத்திரி - ரணில் ஆட்சியின்போது மோடி மூன்று முறை இலங்கை வந்தார். மஹிந்த மோடியை மூன்று சந்தர்ப்பங்களிலுமே சந்தித்தார். மகிந்த மோடியை சந்தித்த இந்த மூன்று சந்தர்ப்பங்களிலும் சரி மகிந்த இந்தியாவிற்குப் பயணம் செய்து மோடியைச சந்தித்தபோதும் சரி மோடியிடம் சொல்வதற்கு மஹிந்தவிடம் ஒரே ஒரு கதைதான் இருந்தது. அந்தக் கதையை வார்த்தைகளில் சொன்னால்,

''நாங்கள் செய்யாததை ரணில் செய்தார். நாங்கள் எங்கள் பொருட்களை சீனாவுக்கு விற்கவில்லை. ரணில் செய்தார். சீனா மட்டுமல்ல, அமெரிக்கா, மேற்கத்திய நாடுகளும் இங்கு கொண்டு வரப்படுவது இந்தியாவுக்கு பெரும் ஆபத்தை விளைவிக்கும்" என்றுதான் மகிந்த நிச்சயமாகச் சொல்லியிருப்பார்.

அதன் பிறகு ரணில் பிரதமராக இருந்தபோது மோடியை சந்தித்தார். ரணில் பிரதமராவதற்கு முன் - 2015க்கு முன் - எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, ரணில், மோடியுடன்தொலைபேசியில்பேசியிருந்தார். அப்போது அவர் ஒரு கதையை மோடியிடம் சொல்லியிருப்பார். .

''ராஜபக்ஷக்கள் இந்த நாட்டை சீனாவைநோக்கிஇழுத்துச்செல்கின்றனர். இலங்கையை சீனாவின் காலனியாக மாற்றராஜபக்ஷக்கள் விரும்புகிறார்கள். இதைனை நடக்க விட்டுவிடாதீர்கள்...' என்பதுதான் 2015க்கு முன் ரணில் மோடியிடம்தொலைபேசியில்சொல்லிய கதையாக இருக்கும்..

“திருணோமலை எண்ணெய்க் குதங்களைசீனாவிற்குக்குத்தகைக்குவிட அனைத்தும்தயாராக உள்ளன. ஆனால் ராஜபக்ஷக்கள் நாட்டில் பெரும் இந்திய எதிர்ப்புஇயக்கத்தைஉருவாக்குகிறார்கள். இதன் பின்னணியில் சீனா உள்ளது..." என்கிற கதையை 2015இல் பிரதமராக இருந்தபோது ரணில் பல முறை சொல்லியிருப்பார்.

அதன் பின்னர் நீண்ட காலமல்ல, 2022 ஜூலையில் ரணில் ஜனாதிபதியானார். 2021 ஜூலையில் கொழும்பு துறைமுகநகரச்சட்டம்நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது, பிரபாகரனிடம் 'ஈழத்தை' ஒப்படைப்பதும் துறைமுக நகரத்தை சீனாவிடம் ஒப்படைப்பதும் ஒன்றேஎன்றுகூறியவர்ரணில். ஆனால், அவர் ஜனாதிபதியான பின்னரும் துறைமுக நகரத் திட்டம் வெகு வேகமாக இடம்பெற்று வருகின்றது.

இந்தவகையில், ராஜபக்ஷக்களுக்கு எதிராக ரணிலும், ரணிலுக்கு எதிராக ராஜபக்ஷக்களும் இருந்தபோதும், ராஜபக்ஷ ரணிலைப் பிரதமராக்கியதும் ராஜபக்ஷக்களைப் பாதுகாக்க ரணில் அரகலய போராட்டத்தை அடக்கியதும் மோடிக்குதலையில்பொறிதட்டியிருக்கும்.

இதற்கிடையில், ரணில் அதிபராக பதவியேற்ற உடனேயே, சீன உளவுக் கப்பல் யுவான் வாங் இந்தியாவின் எதிர்ப்புக்கு மத்தியில் இலங்கையை வந்தடைந்தது.

இந்த நிலையில் மோடி இப்போது யாரை நம்புவார்?'ரணிலையா அல்லது ராஜபக்ஷக்களையா?

ரணிலும் ராஜபக்ஷவும் மோடியையும் இந்தியாவையும் ஏமாற்றிவிட்டனர். ஆட்சியைப் பிடிக்க ரணில் இந்தியாவைப் பயன்படுத்தியதுபோல, ராஜபக்ஷவும் ஆட்சியைப் பிடிக்க இந்தியாவைப் பயன்படுத்தினார், ரணிலுக்கும் ராஜபக்ஷவுக்கும் இடையிலான ஒப்பந்தத்தைப் புரிந்து கொள்ளமுடியாத அளவிற்கு மோடி ஒன்றும் முட்டாள் அல்ல. எனவேதான் ரணிலை இந்தியாவிற்கு அழைக்க மோடி ஒரு வருடம் எடுத்துக்கொண்டார், இந்தாள் இந்தியாவிற்கு ஏன் வருகிறார் என்பதைப்புரிந்கொள்வதற்கு அவருக்கு கால அவகாசம் தேவைப்பட்டது.

''இவர் தனது பரம எதிரியான ராஜபக்ஷக்களிடம் இருந்து ஜனாதிபதி பதவியைப்பெறுவதற்கு இரகசிய பேரம் பேசக்கூடியவர் என்றால், அவர் எமது எதிரிகளுடன் எத்தகைய பேரங்களைப் பேசக்கூடியவர்?'' என்ற பிரச்சினை இந்தியாவுக்கு இருந்திருக்கவேண்டும்.

தான் இந்தியாவுக்கு அத்தகைய பிரச்சினைகளைக் கொடுக்கக்கூடியவர் அல்லர்என்றுபுரியவைக்கரணிலுக்குஒரு வருட காலம் தேவைக்கப்பட்டிருக்கிறது.

'ஆனால் இந்தியா ரணிலை நம்புமா...?' ரணிலுடன் இந்தியாவுக்கு இரண்டுபிரச்சினைகள்உள்ளன. ஒன்று, இந்தியாவின்உதவியுடன்வலிமையான பிரதமராகி, 2017இல் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்கு விட்டது, மற்றையது இந்தியா ஊடாக அன்றி அமெரிக்காவுடன் நேரடியாக வர்த்தகம் செய்வது.

ரணிலுக்கு முன் ஜனாதிபதியாக இருந்தவர் கோட்டாபய. ஜனாதிபதியாகிய பின்னர் அவர் இந்தியாவின் நம்பிக்கையைப்பெற்றார். அவர் சீனாவைப் புறக்கணித்தார். மேலும், தங்கள் நாட்டிற்கு வருமாறு சீனா விடுத்த உத்தியோகபூர்வ அழைப்பை கோட்டா ஏற்கவில்லை. மேலும், இந்தியாவின் மற்றொரு எதிரியான பாகிஸ்தானின் பிரதமர் இம்ரான் கான் இலங்கைக்கு வந்தபோது, அவர் நாடாளுமன்றத்தில் உரையாற்ற தயாராக இருந்தார், ஆனால் கோட்டா அதைத் தடுத்தார். பாகிஸ்தான் பிரதமரின் கூற்றுப்படி, ரணிலை ஜனாதிபதியாக்க அனுமதித்து, சீன உளவுக்கப்பல் வர அனுமதித்து, பாகிஸ்தானுக்கு ஐ.எம்.எப் வசதியில் உதவியதன் மூலம், ரணில் தான் கோத்தா இல்லை என்பதை இந்தியாவுக்கு நிரூபித்துள்ளார். ஆனால் ஐஎம்எவ் வசதியைப் பெற இந்தியா உதவவில்லை என்றால் ரணில் வெகு காலத்திற்கு முன்பே அழிந்திருப்பார்.



சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த தவணையைப் பெறுவதற்கு ரணிலுக்குசீனாகடனை மறுசீரமைக்க வேண்டும். கடன் மறுசீரமைப்புக்கு ரணிலுக்குஇந்தியாதேவை. சீனாகடன் பிரீமியத்தைஎடுக்கவேண்டும், கடனை மறுசீரமைக்கவேண்டும். இந்தியா தனதுகடனைமறுசீரமைக்கவேண்டும் என்றும்ரணில் விரும்புகிறார். ஆனால் ராஜபக்ஷக்களை ஏமாற்றி ஜனாதிபதி பதவியை பெற்றுக்கொண்டதுபோன்று சீனாவையும் இந்தியாவையும் ஏமாற்றுவது ரணிலுக்கு இலகுவானதாக இருக்காது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee
Chikne Fried Rice with
Vegetable
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# சர்வதேச விசாரணைகளின் மூலமே இனப்படுகொலையை நிரூபிக்கலாம்!

## சாள்ஸ் நிர்மலநாதன் சுட்டிக்காட்டு



சர்வதேச விசாரணை மூலமாகத்தான் இலங்கையில்நடந்ததுஇனப்படுகொலை என்பதை நிரூபிக்க முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தவிடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் - '2015 ஆம் ஆண்டு ஐ.நா.மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக சர்வதேச கண்காணிப்பாளர்களின் விசாரணை வேண்டும் என்பதே எங்களுடைய தொடர்ச்சியான வலியுறுத்தலாகும்.

அதன் அடிப்படையில் தான் எங்களுடைய தொடர்ச்சியான கோரிக்கை அமைகிறது. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கோரிக்கை என்பது நியாயமான ஒரு கோரிக்கையாக உள்ளது. இங்கு கொலை செய்தவர்களேவிசாரணை செய்வதும் தீர்ப்பளிப்பதுமான ஒரு நாடாக இலங்கை இருக்கிறது.

யார் கொன்றார்களோ, யார் எங்களுக்கு மிகப்பெரிய அழிவைஏற்படுத்தினார்களோ அவர்களே அதனை விசாரிப்பதும், அதற்குரிய தீர்ப்பு வழங்குவதற்கானஒருநாடாக இலங்கை இருக்கின்றது.

சர்வதேச விசாரணை மூலமாகத்தான்இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதை நிரூபிக்க முடியும்.

எனவே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கேட்கின்ற சர்வதேச விசாரணை நியாயமானது.

அவர்களுடைய கோரிக்கைக்கு பூரணமான ஆதரவு வழங்கப்படும் - என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# சமஷ்டி அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்பட்டு வழங்கப்படல் வேண்டும்

## கோவிந்தன் கருணாகரம் வலியுறுத்து



வடக்கு கிழக்கு இணைந்த மாகாணங்களுக்கு சமஷ்டி அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதே எமது தீர்வாகவுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்தவிடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'தென்னிலங்கையில் சரத் வீரசேகர, உதயகம்மன் பில, விமல் வீரவன்ஸ போன்ற இனவாதிகள் 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை,

மாகாணசபை முறைமையை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறிவரும் அதே கருத்தை அகில இலங்கைதமிழ்க்காங்கிரஸ் கஜேந்திரகுமார் அணியினரும் கூறுகின்றமை வேடிக்கையானது.

வடக்கு கிழக்கு இணைந்த மாகாணங்கங்களுக்கு சமஷ்டி அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதே எமது தீர்வாகவுள்ளபோதிலும் தற்போதைய நிலையில் 13 ஆவது திருத்தை முழுமையான அமுல்படுத்தி அதனை ஒரு முதல்படியாகக் கொண்டு தீர்வு நோக்கிய செயற்பாட்டினை முன் கொண்டு செல்ல முடியும்.

வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினர் குரல்களுக்கு நாங்களும் மதிப்பளித்துவடக்குகிழக்கு தமிழர்கள் ஹர்த்தாலை அனுஷ்டிப்போம்.

இலங்கையில் தமிழர்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதை நாங்கள் விரும்புகின்றோம் என்ற வகையில் இந்திய பிரதமர் தனது பேச்சின்போது வலியுறுத்தியுள்ளார்.

அந்த வகையில் அனைத்துகட்சியினரையும் அழைத்து ஜனாதிபதி மகாநாடுஒன்றைநடாத்தியுள்ளார். அதன் ஊடாக அமைச்சரவை உபகுழுவை நியமித்துள்ளார். - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)



# அஸ்வெசும திட்டத்தால் இறந்தார் வயோதிபர்

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவிற்கானமேலதிக செயற்பாடுகளுக்காக பிரதேச செயலாளர் அலுவலகததுக்கு முன்பாக வரிசையில் காத்திருந்த நபர் ஒருவர் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் எல்ல பிரதேச செயலாளர் பிரிவு அலுவலகத்திற்கு முன்பாக வியாழக்கிழமை முற்பகல் பதிவாகியுள்ளதாகபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

77 வயதுடைய வயோதிபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வரிசையில் காத்துக் கொண்டிருந்த குறித்த முதியவர் திடீரென மயக்க முற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# திருமலை மாவட்ட அரச அதிபராக சாமிந்த ஹெட்டியாரச்சி நியமனம்!



திருகோணமலை மாவட்ட அரச அதிபராக இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர சேவையை சேர்ந்த சாமிந்த ஹெட்டியாரச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்தவகையில் இவர் புதன்கிழமை மாவட்ட செயலகத்தில் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிய பி.எச்.என்.ஜயவிக்ரம ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவை திறந்த பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்ட சாமிந்த ஹெட்டியாரச்சி 2000 -2006 ஆம் ஆண்டு வரை திருகோணமலை மாவட்டத்தின் கோமரங்கடவெலபிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் உதவி செயலாளர், சிரேஷ்ட்ட உதவி செயலாளர், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் மேலதிக செயலாளர் ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)





OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

# மரங்களுக்கு மண்ணெண்ணெயை அச்சுவேலியில் ஊற்றிய விஷமிகள்



யாழ்ப்பாணம், அச்சுவேலி, வளர்மதி சனசமூக சமூக நிலையத்தில் உள்ள பூச்செடிகள், பயன் தரு மரங்களுக்கு அடையாளம் தெரியாத இருவர் மண்ணெண்ணெய் ஊற்றிச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவமானது அப்பகுதியிலுள்ள சிசிடிவி கெமராவில் பதிவாகியுள்ளது. இந்நிலையில் குறித்த இருவரும் அப்பகுதி மக்களால் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இது குறித்து அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# புத்தசாசன அமைச்சர் யாழுக்கு திடீர் விஜயம்





புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

கடற்படையின் விசேட படகு மூலம் நெடுந்தீவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில்பங்கேற்பதற்காக அமைச்சர் வருகை தந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின்போது நெடுந்தீவுமகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற பாடசாலை நூலக அபிவிருத்தி மற்றும் மொழி இலக்கிய கலை மேம்பாட்டுத்திட்டத்தை அமைச்சர் விதுர விக்கிரம சிங்க ஆரம்பித்து வைத்தார்.

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் மேலும் சில நிகழ்வுகளில் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க கலந்துகொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

# யாழில் சிறிய தந்தையால் சிறுமிமீது துஷ்பிரயோகம்!


சிறிய தந்தையால் 13 வயதான சிறுமியொருவர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் யாழில் இடம்பெற்றுள்ளது.

யாழ், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் பெண்ணொருவர், இரண்டாவது தடவையாக திருமணம் செய்து கொண்டு தனது முதல் தாரத்தின் மூன்று பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில் அந்தப் பெண்ணின் இரண்டாவது கணவர், 13 வயதான அப்பெண்ணின் மகளை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, பொலிஸார் சிறுமியை மீட்டு வைத்திய பரிசோதனைக்காக வைத்திய சாலையில் அனுமதித்துள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

# சிலுவையை உடைத்த இளைஞர் யாழில் கைது



யாழ் பண்டத்தரிப்பு பற்றிமா தேவாலய வளாகத்தில் இருந்த சிலுவையை உடைத்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த இளைஞர் மது போதையில் இருந்த நிலையிலேயே இவ்வாறு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, அங்கு வந்த பொலிஸார் குறித்த இளைஞரைக் கைது செய்துள்ளதுடன் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

# களுத்துறைக் கடற்கரையில் தாயும் சேயும் சடலமாக மீட்பு!

களுத்துறை வடக்கு கடற்கரையில் கரையொதுங்கி இருந்த பெண் ஒருவரின் சடலம் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த பெண் வியாழக்கிழமை இரவு களுத்துறை கடற்கரைப் பகுதியில் சடலமாக கண்டெடுக்கப்பட்ட சிறுமியின் தாய் என அடையாளம் காணப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

களுத்துறை வடக்கு நாகசந்திக்கு அருகில் உள்ள கடற்கரைப் பகுதியில் இருந்து இரண்டரை வயதான குழந்தையின் சடலமொன்று வியாழக்கிழமை இரவு மீட்கப்பட்டிருந்தது.

வடக்கு களுத்துறை கடற்கரையில் வியாழக்கிழமை பிற்பகல் சடலமாக கண்டெடுக்கப்பட்ட இரண்டரை வயது சிறுமியின் தாயின் சடலம் அதே கடற்கரையில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. நேற்று காலை கிடைத்த தகவலின்படி, பொலிஸார் நடத்திய விசாரணையில், கடற்கரையில் பாறையில் சிக்கியிருந்தநிலையில்பெண்ணின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த தாயும் மகளும் களுத்துறை - தொடம்கொட - ஹல்கண்டாவல பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என தற்போது தெரியவந்துள்ளதுடன் சடலங்கள் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், களுத்துறை மாவட்டத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரால் விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர்களுக்காகச் சர்வதேசம் நேரடியாகத் தலையிடவேண்டும்

## ரவிகரன் வலியுறுத்து



இலங்கை அரசின் தமிழர்கள் மீதான அடக்கு முறை மற்றும் இன அழிப்புச் செயற்பாடுகளுக்கு எதிராக, நியாயமான தீர்வை வழங்க சர்வதேசம் நேரடியாகத் தலையிடவேண்டும் என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைரசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் இடம்பெற்ற மாபெரும் கவனவீர்ப்புப் பேரணியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

சர்வதேச நியமத் தின் அடிப்படையில் கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுகள் இடம் பெறவேண்டும் என்பதுடன், சர்வதேசக் கண்காணிப்பில் இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பது எமது நிலைப்பாடாகவிருக்கின்றது.

இந் நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும், பொறுப்புக்கூறல் விடயத்திலே இலங்கை அரசிற்கு சர்வதேசம் அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும், தமிழ் மக்களின் அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் விடுவிக்கப்படவேண்டும், அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவுகள் மாபெரும் கவனவீர்ப்பை நடத்தியிருக்கின்றனர்.

இதுதவிர, குருந்தூர் மலை விவகாரத்தில் எமது சைவ வழிபாடுகளை மேற் கொள்ளலாமென நீதிமன்று கட்டளை பிறப்பித்தும், அக் கட்டளைகளுக்கு மாறாக சில இனவாத அரக்கர் கூட்டம் எம்மை வழிபாடுகளில் ஈடுபடாமல் தடுத்துக்கொண்டிருக்கின்றது.

இவ்வாறாக் தமிழர்களின்மீது மாற்றான்தாய் மனப்பான்மையுடன் செயற்படும் இலங்கை அரசிற்கு எமது கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இலங்கை அரசின் தமிழர்கள் மீதான அடக்குமுறைமற்றும், இனஅழிப்புச் செயற்பாடுகளுக்கு எதிராக நியாயமான தீர்வைவழங்க சர்வதேசம் நேரடியாகத் தலையிடவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (05)

# ஜனாதிபதி, பாதுகாப்பு தரப்புகளுக்கு முஸ்லிம் எம்.பிக்கள் நன்றி பாராட்டு




இஸ்லாமிய அமைப்புகள் மீது போடப்பட்ட தடை எமது அரசால் உத்தியோகபூர்வமாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் நீக்கப்பட்டமை மகிழ்ச்சியளிப்பதாகவும், தடையை நீக்க நடவடிக்கை முன்னெடுத்தஜனாதிபதிமற்றும்பாதுகாப்பு துறைக்கு நன்றிகளைத் தெரிவிப்பதாகவும்திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜங்க அமைச்சருமான சட்டதரணி எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் அநுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இஸாக் ரஹ்மான் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புதரப்பினருடனான எங்களின் நியாயமான கோரிக்கைகள் மற்றும் தொடர் முயற்சியின் பயனாகத் தடை செய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புக்களின் தடை நீக்கப்பட்டுள்ளமை வரவேற்கக்கூடிய விடயமாக உள்ளதுடன் இறைவனுக்கே புகழனைத்தும். இந்தத் தடை நீக்கம் செய்ய முன்வந்து நடவடிக்கை எடுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பாதுகாப்பு ஆலோசகர் முன்னாள் அமைச்சர் சாகல ரத்னாயக்க அடங்களாக பாதுகாப்பு படைகளின் பிரதானிகள், பாதுகாப்புப்படை அதிகாரிகளுக்கு நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறோம்.

நாங்கள் சந்தித்து பேசியவுடன் இத்தடையை நீக்க ஜனாதிபதி முன்வந்ததுடன் பாதுகாப்பு தரப்பின் மேலதிக ஆராய்வுகள், நடவடிக்கைகள் காரணமாக சிறிய கால தாமதம் ஏற்பட்டிருந்தாலும் கூட இத்தடையை நீக்கியமை மகிழ்ச்சியளிக்கிறது அல்ஹம்துலில்லாஹ்.

வர்த்தமானியின் உபஅட்டவணையில் குறிப்பிடப்பட்டிருந்த ஐக்கிய தவ்ஹீத் ஜமாஅத், சிலோன் தவ்ஹீத் ஜமாஅத், ஸ்ரீ லங்கா தவ்ஹீத் ஜமாஅத், அகில இலங்கை தவ்ஹீத் ஜமாஅத், ஜமாஅத் அன்ஸாரி சுன்னதில் முஹம்மதியா ஆகிய அமைப்புக்களின் தடை நீக்கப்பட்டுள்ள விடயம் வெளிநாட்டு புலமைப்பரிசிலை பெரும் இளைஞர்கள், மாணவர்களின் எதிர்காலத்துக்கும், மார்க்க விடயங்களுக்கும், நாட்டின் பொருளாதார சமூக விடயங்களுக்கு நன்மையாக அமையும் என்று நம்புகிறோம். மேலும் தடை நீக் கம் செய்யப்பட்டுள்ள அமைப்புக்கள் நாட்டினதும், முஸ்லிம் சமூகத்தினதும் மேம்பாட்டு விடயங்களில் கவனம் செலுத்த எங்களின் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறோம். - என்று தெரிவித்துள்ளனர். (05)

# பாண் சாதனையாளர் யாழ்ப்பாணம் வந்தார்










பிரான்ஸின் பாரிஸில் இடம்பெற்ற சிறந்த பாண் உற்பத்தியாளருக்கான போட்டியில் இந்த ஆண்டுக்கான விருதை வென்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் நேற்று (வெள்ளிக்கிழமை) இலங்கை வந்தார்.

பிரான்ஸில் - பரிஸில் ஆண்டுதோறும்நடத்தப்படும் 'சிறந்த பாண் உற்பத்தியாளருக்கான போட்டியில், இந்தஆண்டுக்கானவிருதை இலங்கையின் யாழ்ப்பாணம் தெல்லிப்பழையைச் சேர்ந்த 37 வயதான தர்ன் செல்வராஜா வென்றிருந்தார்.

La meilleure baguette de Paris என்பது இந்த போட்டியின் பெயராகும்.

இது தமிழில் 'பாரிசின் சிறந்த பாண்' என்று அர்த்தப்படும்.

30 ஆவது முறையாக இடம்பெறும் இந்தப் போட்டியில், இந்தமுறை 126 பேர், பிரான்ஸின் பாரம்பரியம்மிக்க ஹுழி-ஆற்ளமிமிள வந போட்டிக்கு பாணைத் தயாரித்து அனுப்பியிருந்தனர்.

இதில் தர்ன் செல்வராஜா தயாரித்த பாணின் தரம் மற்றும் சுவை நடுவர்களைக் கவர்ந்து, முதலிடத்தைப் பிடித்திருந்ததுடன் வெற்றிப் பரிசாக 4000 யூரோவை பணப்பரிசாகவும் பெற்றிருந்தார்.

அத்துடன் பிரான்சின் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன்னின் எலிசே மாளிகையில், அடுத்துவரும் ஓர் ஆண்டுக்கு பாண் தயாரிக்கும் வாய்ப்பும் தர்னுக்கு கிட்டியது.

2009ஆம்ஆண்டுமுதல் அவர் இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்தநிலையில் நேற்று (வெள்ளிக்கிழமை) இலங்கை வரும் அவர் அரச மட்டத்திலான அதிகாரிகள் மற்றும் பொது அமைப்புகளுடன் சந்திப்புகளை மேற்கொள்ள உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாணின் உற்பத்தி மற்றும் அதன் தனித்துவம் தொடர்பில் இளைஞர்கள் மத்தியில் தெளிவுபடுத்தி அது சார்ந்த கல்வி நிலையங்களை உருவாக்குவதே தமது இலக்காகும் என தர்ன் செல்வராஜா தெரிவித்துள்ளார். (05)

# தன்மீது வாள் வெட்டு நடத்திய திருடர்களை பந்தாடிய முதியவர்!

வவுனியா, நொச்சி மோட்டையில் வியாழக்கிழமை இரவு முகமூடி அணிந்த சிலர் வீடொன்றில் புகுந்து அங்கிருந்த தம்பதிகளான 58 வயதான மாரிமுத்து செல்வநாயகம் மற்றும் அவரது மனைவி செ. செல்வராணி மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அத்துடன் அந்த வீட்டில் திருடும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர். இதன்போது சுதாகரித்துக் கொண்ட வீட்டு உரிமையாளர் திடீரென வாளைதிருடர்களிடம்இருந்து பறித்து அவர்கள் மீது பதில் தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதில் காயமடைந்த திருடர்கள் அங் கிருந்த தொலைபேசி ஒன்றை மாத்திரம் எடுத்து விட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

# அடுத்தடுத்து ஐந்து முதலைகள் வல்வெட்டித்துறையில் பிடிபட்டன





யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறைபகுதியில்வியாழக்கிழமை 5 முதலைகள் பிடிக்கப்பட்டுவனஜீவராசிகள் திணைக்களத்திடம்ஒப்படைக்கப்பட்டுள்ளன. தொண்டமனாமாறுசெல்வச்சந்நிதிஆற்று நீரேரியில் நீண்டகாலமாக முதலைகளின் அச்சுறுத்தல் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்து வந்த நிலையிலேயே வியாழக்கிழமை குறித்த முதலைகள் பிடிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் ஆற்று நீரேரியில் 4 முதலைகளும் கொம்மந்தறை பகுதியில் உள்ள நீர் சகதியில் ஒரு முதலையும் பிடிக்கப்பட் டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# 5 ஆவது நாளாக தொடரும் காணி சுவீகரிக்கும் முயற்சி!

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத் திற்குட்பட்ட வெற்றிலைக்கேணி பகுதியில் தனியாருக்கு சொந்தமான காணிகளை இலங்கை கடற்படையினருக்கு நிரந்தரமாக வழங்கும் நோக்குடன் தொடர்ந்து 5 ஆவது நாளாக நேற்று (வெள்ளிக்கிழமை) காணி அளவீட்டு முயற்சி இடம்பெற்றது.

அதே சமயம் இந்நடவடிக்கைக்கு அப்பகுதி மக்கள் தொடர்ந்து எதிர்ப்புத்தெரிவித்து வந்த நிலையில் குறித்த முயற்சியானது தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அங்கு பிரதேச மக்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன், எம்.ஏ.சுமந்திரன், காணி உரிமைக்கான மக்கள் இயக்க பிரதிநிதி இரத்தினசிங்கம் முரளீதரன், வடமராட்சி கிழக்கி மக்கள் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் செல்வன் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர். (05)

# வசந்த முதலிகேக்கு கிடைத்தது பிணை!

அனைத்து பல் கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் இணைப்பாளர் வசந்த முதலிகே பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். நேற்று (வெள்ளிக்கிழமை) கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் முற்படுத்திய போதே இவ்வாறு பிணையில் விடுதலை செய்யப்பட்டார். கடந்த 2020 ஆம் ஆண்டு பல் கலைக்கழகமானியங்கள் ஆணைக் குழுவிற்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது குழப்பம்ஏற்படுத்தியமை தொடர்பில் அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# கொழும்பு பொரளை பகுதியில் கண்ணீர்ப் புகைத் தாக்குதல்!

தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று (வெள்ளிக்கிழமை)நடத்திய பாரிய போராட்டத்தின் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

கொழும்பு,பொரளை சஹஸ்புரவுக்கு அருகில் குறித்த போராட்டம் இடம்பெற்றது. சர்வதேச நாணயநிதியத்தின்பாதகமான நிபந்தனைகளை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதாக இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பலரும் இதன்போது கைது செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.07.2023இல் வெளியிடப்பெற்றது.